## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

## திருவாரூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(11.02.2023 முதல் 15.02.2023)

அறிக்கைஎண்: 12/2023 தேதி: 10.02.2023

### திருவாரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30 – 32 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 °செ ஆகவும் பதிவானது.

### திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (11.02.2023 முதல் 15.02.2023).

| கடந்தவாரவானிலை (07.02.2023 முதல் 09.02.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (11.02.2023 முதல் 15.02.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 07/02 | நாள்-2 08/02 | நாள்-3 09/02 | தேதி | நாள்-1 11/02 | நாள்-2 12/02 | நாள்-3 13/02 | நாள்-4 14/02 | நாள்-5 15/02 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 30 | 32 | 32 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 32 | 33 | 33 |
| 22 | 22 | 22 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 23 | 23 | 23 |
| 6 | 6 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 2 | 2 | 3 | 3 | 2 |
| 70-64 | 73-65 | 72-66 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-40 | 90-40 | 90-40 | 90-40 | 90-40 |
| 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 | 10 | 12 | 10 | 10 |
| கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு | வட வட கிழக்கு |

### திருவாரூர் மாவட்டத்திற்கானவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் குறைந்த மேகமூட்டத்துடன் காணப்படும். 11.02.2023 முதல் 15.02.2023 ஆகிய தினங்களில் மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 32 – 33 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22 – 23 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 – 12 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| பயறு வகைகள் | விதைப்பு | நெல் அறுவடை செய்த தரிசு நிலங்களில் உளுந்து மற்றும் பச்சைப்பயிறு விதைக்கவும். |
| பயறு வகைகள் | விதைப்பு | ஒரு கிலோ பயறு விதைக்கு பியூவேரியானா பேசியானாவை 10 கிராம் என்ற வீதத்தில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | இரவு நேர வெப்பநிலை குறைந்து காணப்படுவதால் நிமோனியா பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இரவு நேரங்களில் கொட்டகைகளில் வெப்ப மூட்டிகளை பயன்படுத்தவும். |

**குறுஞ்செய்தி**

வறண்ட வானிலையை பயன்படுத்தி நெல் வயல்களை அறுவடை செய்யவும்.

**இயக்குநர்**